சார்பு நீதிமன்றம் மதுராந்தகம்

EP 58/2025 in HMOP 98/2022

பெயர். திருமதி.மோகனா நாள். 06.03.2026
த/பெ.

<u>எதிர்மனுதாரர் சா.2 அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்</u>

1. என் மகனும் மருமகளும் பிரிந்து வழக்கு தாக்கல் செய்துள்ளனர். அதற்காக வந்துள்ளேன். மனு ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் நேற்று தாக்கல் செய்துள்ளேன். மனுதாரருக்கு எதிராக சாட்சி சொல்ல வந்தேன் என்றால் சரியல்ல. நான் 5ம் வகுப்பு வரை படித்துள்ளேன். நெற்குணம்பட்டு கிராமத்தில் சொந்த வீட்டில் வசித்துவருகிறேன். அதற்கான ஆவணம் தாக்கல் செய்யவில்லை. அந்த வீடு என் மாமனார் பெயரில் உள்ளது. என் கணவர் எந்த வேலையும் செய்யவில்லை. எனக்கு இரண்டு மகள்கள் மற்றும் ஒரு மகன். என் மகன் 10 வகுப்பு வரை படித்துள்ளார். எனக்கு சொந்தமாக நிலம் உள்ளது. 70 சென்ட் நிலம் உள்ளது. அது வானம் பார்த்த பூமி.

2. முதியோர் உதவி தொகை பெறவில்லை. மகளிர் சுய உதவிக்குழுவில் இல்லை. என் மகன் என்ன வேலைக்கு செல்கிறார் என்றால் கூலி

வேலைக்கு செல்கிறார். எனக்கு 77 வயது ஆகிறது. என்னால் நடக்க இயலாது. வயது காரணமாக எனக்கு முட்டி தெய்மானம் வந்தது என்றால் சரிதான். மனுதாரருக்கு பராமரிப்பு தொகை கொடுக்க கூடாது என்பதற்காக பொய் சாட்சி கூறுகிறேன் என்றால் சரியல்ல. என் மகனுக்கு பெண் குழந்தை உள்ளது என்றால் சரிதான். அது வயதுக்கு வந்த போது என் வீட்டில் இருந்தார் என்றால் சரிதான். அந்த மகளை என் மகன்தான் பராமரிக்க வேண்டும் என்றால் சரிதான்.

மறு விசாரணை – இல்லை